**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No. 90 /2019**

27.10.2025 இன்று 1969 ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.R.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 செல்வம் த/பெ.லட்சுமி நாராயணன் - பிரதிவாதிகள் 2 மற்றும் 15 தரப்பில் குறுக்கு விசாரணை :

இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் தாவா சொத்துக்களில் பாகம் வேண்டுமென்று கேட்டுள்ளேன். வழக்கில் சொத்துக்கள் எத்தனை அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் A to F வரை சொத்துக்கள் அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி அட்டவணைகளில் உள்ள சொத்துக்களின் சர்வே எண்கள் மற்றும் அவற்றின் விஸ்தீரனம் என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியாது. வாதி சான்றாவணம் 1, 01.10.1950 தேதியில் ஏற்பட்ட பாகபிரிவினையில் எத்தனை அயிட்ட சொத்துக்கள் உள்ளது என்றால் அந்த பாக பிரிவினை இரண்டு நபர்களுக்கு இடையில் ஏற்பட்டது. தாவா சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் குப்புசாமி என்ற நாராயணசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி குப்புசாமி என்ற நாராயணசாமி என்பவர் இந்த வழக்கு 1 ம் பிரதிவாதி உதயகுமார் என்பவரின் தாத்தா என்றால் ஆமாம். மேற்படி குப்புசாமி என்ற நாராயணசாமிக்கு வாரிசுகள் எத்தனை பேர்கள் என்றால் இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் அவருடைய வாரிசுகள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் மகள் பெயர் கொண்டம்மா, மகன்கள் பெயர்கள் ஜெயந்தி ரெட்டியார் மற்றும் ராமசாமி ரெட்டியார் ஆகும். 1950 ம் ஆண்டு ஏற்பட்ட பாகபிரிவினையில் சொத்துக்கள் எத்தனை அயிட்டங்களாக காட்டப்பட்டுள்ளது என்றால் A to F வரை காட்டப்பட்டுள்ளது. A அட்டவணை சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் ராமசாமிக்கு ஒதுக்கப்பட்டது. A அட்டவணை சொத்து ராமசாமிக்கு பாத்தியப்பட்ட 1/2 பாகம் என்று அந்த பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். B அட்டவணை சொத்து யாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதி உதயகுமாருக்கு ஒதுக்கப்பட்டது. B அட்டவணை சொத்து உதயகுமாருக்கும் அவரது தாயார் லட்சுமி பாய் என்பவருக்கும் 3/8 பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.